# மரபுகளும் மாற்றங்களும்

**புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில்**
**ஐந்தாண்டுப் (2019-2024) பணிப் பகிர்வு**




**அருள்பணி. குமார்ராஜா**



அகஸ்டின் - சிறிய புஷ்பம் வெளியீடு : 10

தூத்துக்குடி

## உள்ளே...


1. பணி விருதுவாக்கு ........................................ 1

2. மரபுகளும் மாற்றங்களும் .................................. 3

3. பங்கில் நிகழ்ந்த மாற்றங்கள் ................................ 13

4. சிறந்த 10 நிகழ்வுகள் ...................................... 19

5. தங்கத் தேர்ப் பெருவிழா சிறப்புகள் ......................... 25

6. சில தனித்துவ நிகழ்வுகள் ................................. 28

7. தாயைப் பெருமைப்படுத்திய முன்னெடுப்புகள் ................ 34

8. திறனாய்வும் பரிந்துரைகளும் ............................... 37

9. 30 நாள் நன்றி மன்றாட்டு ................................... 41

10. பனிமய அன்னைப் பாடல்கள் ................................ 42

# மரபுகளும் மாற்றங்களும்

## 1

## பணி விருதுவாக்கு

அருள்பணிப் பொறுப்பேற்கும் புதிய குருக்கள் தங்களது பணி எவ்வாறு அமையப்போகிறது என்பதைச் சுட்டும் பணிக்குறிக்கோள் ஒன்றை விவிலியப் பின்புலத்தில் தேர்ந்தெடுப்பது வழக்கம். அவ்வாறே எனது அருள்பணி வாழ்விலும் "நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராயிருப்பதே என் தந்தைக்கு மாட்சியளிக்கிறது" (யோவா 15:8) என்பதே என் பணிக்குறிக்கோளாக அமைந்திருந்தது. அதையொட்டியே எனது பணிகளும் அமைந்திருந்தன.

எடுத்துக்காட்டாக, நான் தூத்துக்குடி மறைமாவட்டக் கல்விப் பணிக்குழுச் செயலராக ஐந்து ஆண்டுகள் (2006-2011) பணியாற்றியபோது, ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறைகள், தியானங்கள் என மொத்தம் 240 நிகழ்வுகள் நடத்தினேன். அதுபோலவே, டிவைன் மெர்சி தியான இல்லத்தின் இயக்குநராக மூன்று ஆண்டுகள் (2016-2019) பணியாற்றியபோது, 124 ஒருநாள் தியானங்களை நடத்தினேன். இவ்வாறு, "மிகுந்த கனி தந்து" என்னும் பணிக் குறிக்கோள் பயன்தரும் ஊக்க மருந்தாக இருந்தது.

ஆனால், புனித பனிமய அன்னைப் பேராலய அதிபராக, பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டபோது, இந்தப் புதிய சூழலுக்குப் புதியதொரு பணிக் குறிக்கோள் தேவைப்பட்டது. எனவே, தூய ஆவியாரின் துணையோடு, “தூய்மையோடும், நேர்மையோடும், அச்சமின்றிப் பணிசெய்ய” (லூக் 1:75) என்னும் இறைவாக்கைத் தேர்ந்தெடுத்தேன்.

செக்கரியா தம் மகன் திருமுழுக்கு யோவானைப் பற்றி இறைவாக்காக முன்னுரைத்த இந்த இறைமொழி அனைத்து அருள்பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பது என் நம்பிக்கை. எனவே, இந்த இறைமொழியை என் அலுவலகத்தின் வாசலிலும், அலுவலகத்தில் நுழைபவர்கள் பார்க்கும்படி உள்புறக் கதவிலும் பொறித்து வைத்தேன். கடந்த ஐந்து ஆண்டுகளில் அலுவலகத்தில் நுழைந்த எத்தனை பேர் இந்தப் பணிக் குறிக்கோளை வாசித்தார்கள் என்பதை அறியேன். ஆனால், எனக்கு இந்த இறைமொழி ஊக்கமூட்டி, எனது பணியை நிறைவு செய்ய உதவியதற்காக இறைவனுக்கு நன்றி.



2

# மரபுகளும் மாற்றங்களும்

மரபு என்பது ஒரு குடும்பம், நிறுவனம், நாட்டின் வாழ்வோடும், வரலாற்றோடும் இணைந்தது. அங்குள்ள மக்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பின்னர் மரபாக மாறிவிடுகின்றன. “பாரம்பரியம்” (tradition) என்னும் சமற்கிருதச் சொல்லையே, அழகு தமிழில் மரபு என்கிறோம். எல்லாப் பங்குகளிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும் மரபுகள் இருக்கின்றன. குறிப்பாக, வரலாறு கூடக்கூட, அவற்றின் மரபுகளும் கூடுகின்றன. எனவேதான், ஈராயிரத்து இருபத்தைந்து ஆண்டுகளைத் தொட்டு நிற்கும் கத்தோலிக்கத் திருஅவைக்கென நெடிய மரபு உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில், “மரபும் விவிலியமும் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. ஒரே ஊற்றிலிருந்து பிறக்கின்றன. திருமரபு விவிலியத்தோடு இணைந்து இறைவார்த்தையின் ஒரே களஞ்சியமாக அமைகிறது” என்று ‘இறைவெளிப்பாடு’ என்னும் சங்க ஏடு சொல்கிறது.

மேலும், திரு அவையில் திருவழிபாட்டு மரபு, இசை மரபு, திருத்தூது மரபு, அருளடையாளங்கள் பற்றிய மரபு, துறவற

சபைகளின் மரபு போன்ற பல்வகை மரபுகள் இருக்கின்றன என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. இத்தகைய மரபுச் செல்வங்களை நாம் காக்க வேண்டும் என்று "இன்றைய உலகில் திருச்சபை" (எண் 56, 60) என்னும் கோட்பாட்டு ஏடு சொல்கிறது. அதே வேளையில், சில மரபுகள் முன்மதியோடு தழுவியமைக்கப்படவேண்டும் என்றும் அதே ஏடு (எண் 62) பரிந்துரைக்கிறது.

இந்தக் கண்ணோட்டத்தில் புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் நெடிய வரலாற்றை உற்று நோக்குகையில் பல மரபுகள் தோன்றி வளர்ந்துள்ளதையும், சில மறைந்துள்ளதையும், சில மாற்றம் பெற்றுள்ளதையும் நாம் காணலாம். காலம் மாற மாற மரபுகளும் முன்மதியோடு மாற்றம் பெறவேண்டும் என்னும் வத்திக்கான் சங்கத்தின் பார்வையிலேயே, இந்தப் பங்கிலும் மரபுகளும் மாற்றம் பெற்றுள்ளன என்பது பாராட்டுக்குரிய ஒன்று. இத்தகைய மரபுகளையும், அவற்றின் மாற்றங்களையும் ஏற்று, கடைப்பிடிக்கின்ற அனைவரும் போற்றுதற்குரியவர்கள் என்பதுவும் பதிவு செய்யப்படவேண்டிய ஒன்று.

பேராலயப் பங்கின் திருவழிபாடு, இசை, அருளடையாளங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றில் பாராட்டுக்குரிய, பிறரும் பார்த்துப் பின்பற்றக்கூடிய நல்ல மரபுகள் பல இருக்கின்றன. வழிபாட்டின் முதன்மையான நேரங்களில் "தேதேயும்" நன்றிப் பாடல் பாடுவது, "லவுதாதே" என்னும் போர்த்துக்கீசிய பாடலை இசைப்பது, பனிமய அன்னையின் பெருவிழா நாள்களில் "தேர்ஸ்" என்னும் செபமாலை, மன்றாட்டு மாலை, இறைவார்த்தைப் பகிர்வு, அருளிக்க ஆசி அடங்கிய "மூன்றாம் மணி வழிபாடு" ஆகியன குறிப்பிட்டுச் சொல்லும்படியான மரபுகள். திருவருகைக்காலம், தவக்காலம்

என்னும் இரண்டு திருவழிபாட்டுக் காலங்களிலும் திருமுழுக்கு, திருவிருந்து, திருமணம் ஆகிய மூன்று அருளடையாளங்களும் வழங்கப்படுவதில்லை என்பது இன்னொரு பாராட்டுக்குரிய மரபாகும். இது தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய மாதிரி மரபு. தவக்கால வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை சிலுவைப்பாதை, பெரிய வியாழன் நள்ளிரவில் சிலுவைப் பாதைப் பவனி, பெரிய வெள்ளியன்று நண்பகல் சிலுவைப்பாதை ஆகியன பனிமய அன்னைப் பேராலயப் பங்கிற்கேயுரிய தனி மரபுகளாகும். இவையும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டியவை என்பதில் ஐயமேயில்லை.

அதே வேளையில், ஒரு சில மரபுகளைக் காலத்தின் தேவையறிந்து உடைக்கவும், மாற்றவும், தழுவியமைக்கவும், புதிய மரபுகளை உருவாக்கவும் இப்பங்கின் தலைமைப் பொறுப்பேற்ற பங்குத் தந்தையர்களும், அவர்களின் பரிந்துரையை ஏற்று பங்கு மக்களும் முன் வந்துள்ளனர் என்பது பிற பங்குகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. அத்தகையவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் வரலாற்றை இரண்டு கால கட்டமாகப் பிரிக்கலாம். இயேசு சபைத் துறவியான அருள்தந்தை விஜிலியுஸ் மான்சியின் காலத்திலிருந்து, தூத்துக்குடி மறைமாவட்டத்தோடு இப்பங்கு இணைக்கப்பட்ட காலம் வரை முதல் கட்டமாகக் கருதப்படலாம். தூத்துக்குடி மறைமாவட்டம் 1923ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பின்னர், 1930ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தோடு இணைக்கப்பட்ட பின்னர் கடந்த 94 ஆண்டு காலத்தை இரண்டாம் கட்டமாகவும் கொள்ளலாம்.

முதல் கால கட்டத்தின் தொன்மை, ஆவணங்களின்மை போன்றவற்றின் காரணமாக அதனைத் தவிர்த்துவிட்டு, கடந்த 94 ஆண்டு வாழ்வை மட்டுமே உற்று நோக்குகையில் மரபுகளும், மாற்றங்களும் ஏராளம் நிகழ்ந்துள்ளதை நாம் காணலாம். இந்தப் பங்கின் பெருமைமிகு பங்குத் தந்தையான இறையடியார் **அந்தோனி சூசைநாதர்** அடிகளாரே (1932-1938) மரபுகளுக்கும், மாற்றங்களுக்கும் வித்திட்ட ஞானமும், படைப்பாற்றலும் மிக்க முதல் அருள்பணியாளர் என்பதற்கு நம்மிடையே பல ஆதாரங்கள் உள்ளன.

மறையறிவும், இறைப்பற்றும் குறைந்த இளையோரை இனம் கண்டு அவர்களின் ஆன்மீக, சமூக வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அன்னார் தொடங்கிய பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபை இன்றளவும் இப்பங்கில் உயிர்த்துடிப்போடு செயல்பட்டு, இறையடியாரின் புகழுக்கு சான்று பகர்கிறது. தங்களது நிறுவனரின் மனவோட்டத்திற்கேற்ப இந்த சபையினரே கடந்த 90 ஆண்டுகளில் சில மரபுகளைக் காத்தும், சில மரபுகளைப் புதுப்பித்தும் வந்துள்ளனர். அவர்களும் பாராட்டுக்கு உரியவர்களே.

பங்கு மக்களிடையே விளங்கிய ஏற்றத்தாழ்வுகள், கத்தோலிக்க இறைநம்பிக்கைக்கு எதிரான மூடப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை உடைப்பதில் அதிக ஆர்வம் காட்டிய இன்னொரு பங்குத் தந்தை ஞானமும், படைப்பாற்றலும் மிக்க அருள்தந்தை **பவுல் அலங்காரம்** (1942-1952) அடிகளார். “ஏழைகளின் தந்தை” என்று போற்றப்பெறும் தந்தை பவுல் அலங்காரம் அவர்களால் மக்களின் மனநிலையில் பல தாக்கங்களை ஏற்படுத்த முடிந்தது என்பதற்கு முந்தைய தலைமுறையினர் சான்று பகர்ந்துள்ளனர்.

இப்பேராலயப் பங்கின் மரபுகளில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய புரட்சியாளராக அருள்தந்தை **லாம்பர்ட் மிராந்தா** (1979–1984) அவர்களைச் சொல்லலாம். உரோமையில் இறையியல் பயின்று முனைவர் என்னும் பெருமைக்குரிய தந்தை மிராந்தா இறையியல் வல்லுநர், இசைஞர், காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்து தேவைகளை நிறைவேற்றிய ஆற்றலாளர் என்னும் பெருமைகளுக்குச் சொந்தக்காரர். அவர்கள்தான் பனிமய அன்னையின் தொன்மை வாய்ந்த இத்திருத்தலத்தை "மைனர் பசிலிக்கா" என்னும் பெருமைக்கு உயர்த்தியவர்கள். உரோமையிலுள்ள மேரி மேஜர் பசிலிக்காவுடன் இத்திருத்தலத்தை இணைத்தவரும் அவர்களே. இந்த ஒரு செயலால் இத்திருத்தலத்தின் கடந்த கால வரலாற்றை உலகிற்கு எடுத்துச் சொன்னதோடு, எதிர்கால ஏற்றத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள் என்று சொல்வது மிகையே அல்ல.

புனித பனிமய அன்னையின் திருவுருவத்திற்குத் திரையிட்டு மறைத்து, திருவழிபாட்டின் சில நேரங்களில் மட்டுமே அன்னையின் அழகிய திருமுகத்தைத் தரிசிக்க முடியும் என்ற நெடுங்கால மரபை உடைத்த பெருமை தந்தை அவர்களையே சாரும். இப்பேராலயம் "பசிலிக்கா"வாக உயர்த்தப்பட்டுவிட்டதால், திருப்பயணிகள் எந்நேரமும் இத்திருத்தலத்திற்கு வரலாம், அன்னையின் திருமுகம் கண்டு மகிழலாம், மன்றாடலாம் என்னும் நோக்கத்தை அவர்கள் மக்களிடம் விளக்கிச் சொல்லி அந்த மகத்தான மாறுதலை ஏற்படுத்தித் தந்தார்கள். அன்னாருக்கு நாம் அனைவருமே நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். பழையனவற்றையே பற்றிக்கொண்டு புதியனவற்றை ஏற்க மறுக்கும் "பழமைவாதிகள்" எக்காலமும், எல்லா இடங்களிலும் உள்ளனர் அல்லவா? அத்தகையோர் அக்காலத்தில்

எத்தகைய கூக்குரல்களை எழுப்பியிருப்பார்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருப்பார்கள் என்று நாம் கற்பனை செய்துகொள்ளலாம். ஆனாலும், தந்தை மிராந்தா இந்த மாற்றத்தி;ல் உறுதியாயிருந்து, மக்களின் மனங்களையும் வென்று காட்டினார். வாழ்க அவரது புகழ்!

பங்குத் தந்தையின் ஒற்றைத் தலைமையின்கீழ் இயங்கி வந்த பேராலய நிர்வாகத்தை, பங்கேற்பு அமைப்புகளின் வழியாக மாற்றியமைத்த பெருமை அருள்தந்தை **இரத்தினராஜ்** (2000–2004) அவர்களைச் சாரும். பல எதிர்ப்புகளையும் கடந்து, தந்தை அவர்கள் உருவாக்கிய பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழு, நிதிக் குழு ஆகியன ஐந்து முறை சிறப்பாகப் பணியாற்றி, இப்போது ஆறாவது குழு பணியாற்ற முன் வந்துள்ளது. இந்தப் பங்கேற்பு அமைப்புகளால் பேராலயப் பணிகளும், நிதி மேலாண்மையும் வெளிப்படைத் தன்மையோடும், கூடுதல் பொறுப்புப் பங்கேற்போடும் நடத்தப்படுகின்றன என்பது பெருமிதம் தருகின்றது.

ஏழு கடற்துறையின் வரலாற்றோடும், கடலோர மக்களின் வாழ்வோடும் பின்னிப் பிணைந்தது பனிமய அன்னைப் பேராலயம் என்பதை வரலாறு நமக்கு எடுத்துச் சொல்கிறது. எனவே, கடந்த 400 ஆண்டுகளுக்கும் மேலாக, “ஏழு கடற்துறையின் ஏக அடைக்கலத் தாய்” என்னும் பெருமைமிகு பெயருக்குத் சொந்தக்காரியாய் விளங்கி வருகிறார் நம் பனிமய அன்னை. இருப்பினும், இரண்டாம் புத்தாயிரம் பிறந்த பின்னர் “ஏழு கடற்துறையோடு எல்லா மக்களுக்கும் ஏக அடைக்கலத் தாய்” என்று நம் தாய் எல்லாருக்கும் தாய் என்று பெயர் மாற்றம் பெற்றார். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்த பெருமை அருள்பணி. **ஜெரோசின் அ. கற்றார்** அவர்களைச் சாரும். இந்த மாற்றத்துக்கும் தொடக்க காலங்களில் எதிர்ப்புகள்

எழுந்திருக்கும். ஆனால், இன்று இந்தப் பெயர் நிலைபெற்றுவிட்டது.

பல மரபுகளை உடைத்தும், சில மரபுகளை மாற்றியும், புதிய மரபுகளை உருவாக்கியும் பணியாற்றினர்கள் தொடர்ந்து வந்த அருள்தந்தை **வில்லியம் சந்தானம்** (2009-2014). பனிமய அன்னையின் தங்க ஆபரணங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் திருடப்பட்டிருந்தன. பின்னர், காவல்துறையினர் திருப்பித் தந்த நகைகளோடு, காணிக்கையாக வந்த இதர பொன் காணிக்கைகளையும் சேர்த்து "பன்னிரு தாரகை" என்னும் பிரம்மாண்டமான பொன் ஆபரணத்தை அன்னைக்கு அணிவித்து அழகு பார்த்தார்கள். மேலோட்டமாகப் பார்த்தால், இது ஒரு சாதாரண நிகழ்வாகத் தெரியும். ஆனால், புதிய மரபு ஒன்றின் தொடக்கம் என்பதை அன்று யாரும் உணர்ந்திருக்க மாட்டார்கள். தற்பொழுதோ, அன்னைக்குக் காணிக்கையாக வரும் சிறிய நகைகளெல்லாம், ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பெரிய ஆபரணமாக மாற்றப்படுவது எதிர்பார்க்கப்படும் ஒரு மரபாக மாறிவிட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019-2024) இவ்வாறு மூன்று முறை (2022, 2023, 2024) பனிமய அன்னைக்கு ஆபரணங்கள் செய்யப்பட்டன. இந்த மரபு தொடரும் என்று நம்பலாம்.

திருவருகைக்காலம், தவக்காலம் என்னும் தடைக் காலங்களில் பேராலயத்தில் திருமணங்கள் நடைபெறா என்னும் புதிய நல்லதொரு மரபை உருவாக்கிய பெருமையும் அருள்பணி. வில்லியம் சந்தானம் அவர்களையே சாரும். இம்மரபு இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மரபுகளை சீர்திருத்தும் பணியையும் அருள்பணி. வில்லியம் சந்தானம் அவர்கள் துணிவுடன் செய்தார்கள். திருச்சிலுவை சிற்றாலயத்தில் 10 நாள்கள் நடைபெற்ற திருச்சிலுவை

விழாவை மூன்று நாள் விழாவாக மாற்றினார்கள். அதுபோலவே, தனியாரின் வசதிக்காக நடைபெற்ற "சிறப்புத் திருப்பலிகளை" பேராலயத்திலிருந்து திருச்சிலுவை சிற்றாலயத்துக்கு மாற்றினார்கள். இவையெல்லாம் எத்துணை நல்ல மாற்றங்கள் என்பதை இன்று உணர்கிறோம்.

அருள்தந்தை **லெரின் டிரோஸ்** (2014-2019) காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மரபுகள் யாவும் பங்கின் ஒழுங்குகளாக மாற்றப்பட்டன. பனிமயத் தாயின் பெருவிழாவின் நற்கருணைப் பெருவிழா நாளில் மட்டுமே புதுநன்மை வழங்கப்படும். ஆகஸ்ட் மாதம் முழுக்க தனிப் புது நன்மை விழாக்கள் அனுமதிக்கப்படா. மாதத்தின் முதல் ஞாயிறு மறைக்கல்வி மாணவர்களுக்கான சிறப்புத் திருப்பலி நடைபெறுவதால், அன்று திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது என்னும் புதிய மரபுகளை உருவாக்கினார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளாக (2019-2024) இப்பேராலயத்தின் பங்குத் தந்தையாகப் பணியாற்றும் பேறுபெற்ற நானும் என் பங்கிற்கு வழிபாட்டிலும், மக்களின் பண்பாட்டுப் பார்வையிலும் சில புதிய மரபுகளை உருவாக்கியுள்ளேன்.

பனிமய அன்னையின் புகழ் பரவவும், அந்த அன்னையிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆசிகளைப் பரவலாக்கவும் தொடங்கப்பட்ட மாதாந்திர "பனிமய நோன்பு வழிபாடு" கடந்த 40 மாதங்களைத் தாண்டி நடைபெற்று வருகிறது. வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போர், திருமண வரனுக்காக, குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போர், தேர்வுகள் எழுதுவோர் போன்ற குறிப்பிட்ட தேவையினருக்காக மாதம் ஒருமுறை நடத்தப்படும் இந்த நோன்பு வழிபாட்டில் ஆர்வத்தோடு பங்கேற்போரின் எண்ணிக்கை பெருகுவதோடு, தேவைகளைத்

தெரிவிப்பவர்கள், தேவைகள் நிறைவேறி சாட்சிய நன்றி பகர்கிறவர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. தேவையில் இருப்போரையும் தாண்டி, அவர்களுக்காக நாமும் மன்றாடவேண்டும் என்னும் மனநிலை மாற்றத்தையும் பேராலயம் வருவோரிடம் இந்தப் புதிய மரபு ஏற்படுத்தியுள்ளது. எனவேதான், இந்தக் கருத்துகளுக்காக ஏழு நாள்கள் ஏறெடுக்கப்படும் தொடர் வேண்டுதலை எல்லாத் திருப்பலிகளிலும் மக்கள் ஆர்வத்தோடு செபித்து வருகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் பனிமய அன்னையின் பெருவிழாவுக்கு ஆயத்தமாக 30 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று புதிய மரபாக மாறியுள்ளது. அதிலும், கடந்த ஆண்டு (2023) 16ஆவது தங்கத் தேர்ப் பெருவிழாவுக்காக நடைபெற்ற 300 நாள் தொடர் மன்றாட்டு, 100 நாள் தொடர் மன்றாட்டு, 30 நாள் தொடர் நோன்பு ஆராதனை ஆகியவற்றில் ஏராளமானவர்கள் ஆர்வத்தோடும், அர்ப்பணத்தோடும் பங்கேற்றனர்.

திருமணம் போன்ற குடும்ப விழாக்களில் வெடி போட்டு பணத்தைக் கரியாக்கி, சுற்றுச் சூழலையும் மாசுபடுத்தும் பழக்கத்தை மாற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதுபோல, நமது தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறான, குழந்தைகளையும், நோயாளர்களையும் அச்சுறுத்துகின்ற செண்டை மேளக் கலாச்சாரத்தையும் மாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு 80% ஆதரவு கிடைத்தது என்பது மனநிலை மாற்றத்திற்கான ஓர் அறிகுறி.

இவை போன்ற பழைய பழக்கங்களை உடைத்து, புதிய மரபுகளை ஏற்படுத்தும் பல முயற்சிகள் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் வேறிடத்தில்

ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மரபு மாற்றங்களைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இறையாசி கிடைக்கட்டும்.

"மாற்றம் ஒன்றுதான் மாறாதது" என்பதே மானிட வாழ்வு மற்றும் வரலாற்றின் நியதி. அதற்கேற்ப எல்லாப் பங்குகளும், எல்லா மானிட நிறுவனங்களும் மாற்றக்கூடாத மரபுகளைப் போற்றியும், மாற்றவேண்டியவற்றை மாற்றியும் தங்களையே தகவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழியாகத் திருஅவை விடுத்துள்ள அறைகூவல். இயேசுகிறிஸ்து பிறப்பின் யூபிலி 2025ஐக் கொண்டாட ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் நாம் இந்த அழைப்பை உளமாரத் தழுவிக்கொள்வோமாக.



3

# பங்கில் நிகழ்ந்த மாற்றங்கள்

“மாற்றம் ஒன்றுதான் மாறாதது” என்பது இயற்கையின் நியதி. இறைவன் ஒருவர்தாம் என்றும் மாறாதவர். மற்ற அனைவரும் மாறிக்கொண்டேயிருக்கின்றோம். மாற வேண்டும். அதுவே நாம் வாழ்கிறோம், இயங்குகிறோம் என்பதற்கான அடையாளம்.

இந்த மாற்றம் தனி மனிதர், குடும்பம், சமூகம் எனப் பல தளங்களிலும் நிகழவேண்டும். ஒரு பங்கைப் பொறுத்தவரையில் ஆன்மீக வாழ்வு என்னும் அருள்வாழ்வில் நேர்மறையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். இல்லாவிட்டால், எதிர்மறையான மாற்றங்கள் நிகழ்ந்து பல தீமைகள் விளைந்துவிடும்.

பனிமய அன்னை பேராலயப் பங்கில் கடந்த ஐந்தாண்டுகளில் (2019-2024) நேர்மறையான மாற்றங்கள் நிகழ பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன, எதிர்காலத்தில் எத்தகைய கனிகளைப் பெற்றுத்தரும் என்பன கூர்ந்து நோக்கவேண்டிய கேள்விகள்.

இவற்றுக்கான விடைகளை சற்று மேலோட்டமாகவே நாம் காணலாம். பேராலயப் பங்கு மக்களின் வழிபாடு, செப வாழ்வு, மனநிலை, செயல்பாடு, வாழ்வியல் மாற்றங்கள், விழிப்புணர்வு, சமூகப் பொருளியல் தளம் ஆகியவற்றில் மாற்றங்கள் கொணர கடந்த ஐந்து ஆண்டுகளில் முனைப்புகள் எடுக்கப்பட்டன. அவற்றில் சிறந்த பத்து மாற்றங்களை இங்கே காண்போம்:

**1. இறைபுகழ்ச்சி.** ஐந்தாண்டுகளுக்கு முன்னால் பேராலயப் பங்கு மக்களுக்கும், இப்பேராலய வழிபாடுகளில் நாள்தோறும் பங்குபெறும் பிற பங்கு மக்களுக்கும் இறைபுகழ்ச்சி என்பது புதிதாக இருந்தது. குறிப்பாக, தந்தை, மகன், தூய ஆவியார் மூவருக்கும் நாம் புகழும், மாட்சியும் செலுத்த வேண்டும். நற்கருணை பெற்றதும் நாம் நன்றி செலுத்த வேண்டும். கைகளை உயர்த்தி ஆண்டவரைப் போற்ற வேண்டும். கரங்களை விரித்து செபமாலை செபிக்க வேண்டும். முழந்தாள்படியிட்டு மன்றாட வேண்டும் ஆகியன கத்தோலிக்கத் திருஅவையின் மரபார்ந்த செயல்பாடுகளே என்பது நினைவூட்டப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டன. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவை இயல்பானவையாக மாறிவிட்டன.

**2. இறைவேண்டல்.** மரபு சார்ந்த செபங்களை மட்டுமே செபித்துவந்த மக்களுக்கு திருவழிபாட்டு மன்றாட்டுகள் ("மனத்துயர் மன்றாட்டு"), விவிலிய மன்றாட்டுகள் (திருப்பாடல்கள்), சொந்த செபங்கள் (திருப்பலியின் இறைபுகழ்ச்சி) ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. இறையடியார்களுக்கு 1000 நாள் தொடர் மன்றாட்டு, தங்கத் தேர்ப் பெருவிழாவுக்காக 300 நாள் தொடர் மன்றாட்டு, 100 நாள் வேண்டல், 30 நாள் தொடர் ஆராதனை போன்றன

செயல்படுத்தப்பட்டு, வரவேற்பு பெற்றன. இறைவேண்டலில் விவிலியத்தின் பங்கு அதிகரிக்கப்பட்டது. அதற்கு உதவியாக 105 விவிலியப் பாசறைகள் நடத்தப்பட்டன.

**3. நோன்புகள்.** நம் திருஅவையின் நெடுமரபிலுள்ள உண்ணா நோன்பு ஊக்கப்படுத்தப்பட்டது. கூடவே, ஊடக நோன்பு (தொலைக்காட்சி, அலைபேசி, இணையதளம் இழப்பு), சொல் நோன்பு (பேச்சைக் குறைத்தல், இன்சொல் பண்பாடு) ஆகியனவும் அறிமுகப்படுத்தப்பட்டன. தவக்காலத்தில் வேறு எந்தப் பங்கிலும் நடைபெறாத நிகழ்வாக சாம்பல் புதன் மற்றும் குருத்து ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நோன்பு வழிபாடு நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்புக் கருத்துக்காக பனிமய நோன்பு வழிபாடு நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நடத்தப்பட்டது.

**4. நேர மேலாண்மை.** வழிபாடுகள், பாசறைகள், மேய்ப்புப் பணிக்குழுக் கூட்டங்கள் அனைத்திலும் நேர மேலாண்மை சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. திட்டமிட்டு நேர மேலாண்மை செய்ய மக்கள் ஊக்குவிக்கப்பட்டனர். பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். பங்கு அலுவலகத்துக்கோ, பங்குத் தந்தைக்கோ முன்கூட்டியே தகவல் கொடுக்க வேண்டும். தேவையின்றி அலையக்கூடாது போன்றவை பழக்கங்களாக்கப்பட்டன.

**5. தகவல் தொடர்பு.** திருமண அறிக்கை, மரண அறிக்கை போன்ற பங்கின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் வாட்ஸ் அப் வழியாகப் பங்கு மக்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டன. ஞாயிறுதோறும் திருப்பலிகளில் வாசிக்கப்படும் ஞாயிறு அறிக்கை முந்தின நாள் மாலையே வாட்ஸ் அப்பில் அனுப்பப்படுவது இந்த பங்கில் மட்டுமே

நடக்கும் ஓர் அதிசய உண்மை. அதுபோல, திருமணம், திருமுழுக்கு, திருவிருந்து போன்ற அருள்சாதனங்கள் பெறவிருப்போர் செய்யவேண்டியன பற்றிய தெளிவான "தகவல் தாள்" அனைவருக்கும் வழங்கப்பட்டது. தவக்காலத்தில் வருகை தரும் திருப்பயணிகளின் தங்குமிடம், கழிப்பறை வசதிகள், திருப்பலி தொடர்பான தகவல்கள் அனைத்தும் வாட்ஸ் அப் வழியாகப் பலருக்கும் அனுப்பப் பட்டது.

**6. வெளிப்படைத்தன்மை.** பங்கின் நிதி நிலை அறிக்கை மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்களுடன் பகிரப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019-2024) தங்க நகைகளைக் காணிக்கையாக வழங்கிய 64 பேரின் பெயர்களும் பனிமய இதழில் அச்சிடப்பட்டன. தங்கத் தேருக்குக் காணிக்கை வழங்கிய அனைவரின் பெயர்களும் வாட்ஸ் அப் வழியாகப் பகிரப்பட்டன. தங்கத் தேர் மலரிலும் அச்சிடப்பட்டன.

**7. பகிர்வும் சமத்துவமும்.** பங்கிலுள்ள தன்னார்வப் பணிகள் அனைத்தும் ஆர்வமுள்ள அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாறு, சமத்துவம் நிலைநாட்டப் பட்டது. எடுத்துக்காட்டாக, திருப்பலியில் வாசகம் வாசித்து, இறைபுகழ்ச்சி மன்றாட்டு செபிப்பதற்கு தற்பொழுது 300க்கும் மேற்பட்டவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. மாதமொருமுறை பிற பங்கைச் சேர்ந்தவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதுபோலவே, நோன்பு வேண்டுதல், முதியோருக்கு நற்கருணை வழங்குதல் போன்றவற்றிலும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அருள்சாதனங்கள் வழங்குவதிலும் அனைவருக்கும் ஒரே மாதிரியான நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. யாருக்கும் தனிச் சலுகை வழங்கப் படவில்லை.

**8. புதியன பற்றிய திறந்த மனநிலை.** புதிய கருத்துகள், சொல்லாடல்கள், சிந்தனைகள், வழிபாட்டு முறைகள், செயல்பாடுகள் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டு, நாளடைவில் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்ளும் திறந்த மனநிலை உருவாக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, திருமண விழாக்களின்போது பல தீமைகளுக்குக் காரணியாக விளங்கும் வெடிகள் மற்றும் செண்டை மேளம் ஆகியன தடை செய்யப்பட்டன. திருமணத் திருப்பலியில் வழிபாட்டுக்கும், மணமக்களுக்கும் இடையூறு வராத வகையில் இரு வீட்டார் சார்பிலும் ஒரு கேமரா மேன், ஒரு வீடியோகிராபர் என இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். அருள்சாதனங்கள் பெறும் முன் விவிலியப் பாசறைப் பங்கேற்பு கட்டாயமாக்கப்பட்டது. இவை அனைத்தையும் பெரும்பாலானோர் திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டனர்.

**9. ஆவணப்படுத்துதல்.** பங்கின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் பனிமயம் இதழில் ஆவணப்படுத்தப்பட்டன. “தங்கத் தேர் 2023 ஓர் ஆவணம்” என்னும் சிற்றேடு எதிர்காலத் தலைமுறையின் உதவிக்காக வெளியிடப்பட்டது. பங்கு மேய்ப்புப் பணிப்பொதுக்குழுவின் அறிக்கைகள், வருகைப் பதிவு, வாசகர் பட்டியல் ஆகியவை ஆவணமாக்கப் பட்டன.

**10. அறப்பணிகள்.** பங்கின் நிதியிலிருந்தும், பங்கு மக்கள், பனிமயத் தாயின் பிள்ளைகளுடைய நன்கொடைகளிலி ருந்தும் ஏராளமான அறப் பணிகள் செய்யப்பட்டன. இரண்டு கூட்டுத் திருமணங்கள் (39 இணையர்கள்), ஆறு பேருக்கு சொந்த வீடு கட்ட 25 இலட்ச ரூபாய் உதவி, கல்வி, திருமணம், மருத்துவம், வாழ்வாதாரம், அடக்கம் போன்றவற்றுக்கு நிதி உதவி, வெள்ளிதோறும் திருச்சிலுவை அன்பு உணவு என

ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் அன்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. நன்கொடைகள், காணிக்கை தந்தோர் அனைவரும் ஏற்பிசைவு செய்யப்பட்டு, பெயர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்களின் ஆசிகளுக்காகத் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. "கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்னும் இறைமொழி மரபாக மாற்றப் பட்டுள்ளது.



4

## சிறந்த 10 நிகழ்வுகள்

**1. தங்கத் தேர்ப் பவனி.** யோசேப்பைத் ***“தன் இரண்டாம் தேரில் வலம்வரச் செய்து ‘இவருக்கு முழந்தாளிடுங்கள்’ என்று ஏவலர் கட்டியம் கூறச் செய்தான்; இவ்வாறு எகிப்து நாடு முழுவதற்கும் அவரை அதிகாரியாக்கினான்”*** (தொநூ 41:43).

கடந்த ஐந்து ஆண்டுகளின் மாபெரும் நிகழ்வு என்று எதைச் சொல்லலாம்? நிச்சயமாக 05.08.2023 முதல் சனி அன்று நடைபெற்ற பனிமயத் தாயின் 16ஆவது தங்கத் தேர்ப் பவனிதான் தனிச்சிறப்பு வாய்ந்த முதற்பெரும் நிகழ்வு.

2013க்குப் பிறகு, சரியாக 10 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு தங்கத் தேர் பவனி வந்தது. ஏன் இந்த தங்கத் தேர்ப் பவனி? நிச்சயமாக, பனிமய அன்னையை மகிழ்ச்சிப்படுத்த அல்ல, மாறாக அன்னையின் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காகத் தான் என்பது தெளிவு.

பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மேதகு ஆயர் அவர்களின் அனுமதி மற்றும் ஆசியுடன் தங்கத் தேர்ப் பணிகள் தொடங்கின.

ஏறக்குறைய 75 விழுக்காடு தேர் புதிதாகச் செய்யப்பட்டது. காவல்துறை அறிக்கையின்படி தங்கத் தேர்ப் பவனியின்போது 2 இலட்சம் மக்கள் பங்கேற்றனர். இலங்கை, துபாய், சவுதி அரேபியா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுவாழ் தூத்துக்குடி மக்கள் ஏராளம் பேர் கலந்துகொண்டனர். இப்பவனி ஒரு மாநகர விழாவாகவும் அமைந்தது. தேர்ப் பவனி முடிந்து 37 நாள்கள் தூத்துக்குடி மாநகரின் பிற சமய அன்பர்கள் திரளாக வந்து தங்கத் தேரைப் பார்வையிட்டனர்.

**2. தங்கத் தேர்ப் பெருவிழா.** "*அவர்கள்* ***திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது*** *எருசலேமில் அவர் செய்தவை* ***அனைத்தையும் கண்டிருந்தனர்***" (யோவா 4:45).

26.07.2023 முதல் 05.08.2023 வரை நடைபெற்ற பனிமய அன்னைப் பேராலயத்தின் 441ஆவது பெருவிழா பலவிதங்களில் சிறப்பு வாய்ந்ததாய் அமைந்தது. நாள்தோறும் ஓர் ஆயர் வருகை என்பது ஒரு சிறப்பு. இலங்கையிலிருந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு **இம்மானுவேல் ஃபர்னான்டோ** - கோவா கர்தினால் மேன்மைமிகு **பிலிப் நேரி** ஆகியோரின் வருகை கூடுதல் சிறப்பு சேர்த்தது. ஆண்டவரின் வியத்தகு செயல்களை அனைவரும் கண்டனர்.

**3. திருத்தந்தையின் தூதுவர் வருகை.** "***ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்! ஆண்டவரது இல்லத்திலிருந்து உங்களுக்கு ஆசி கூறுகிறோம்***" (திபா 118:26).

கடந்த 2000ஆம் ஆண்டில் பேராலயம் வருகை தந்த திருத்தந்தையின் தூதுவர் பேராயர் **லொரன்சோ**

**பல்திஸ்ஸேரி** அவர்களுக்கு அடுத்தபடியாக, 23 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 11.06.2023 ஞாயிறு அன்று திருத்தந்தையின் தற்போதைய இந்திய மற்றும் நேபாள நாடுகளின் தூதுவர் பேராயர் **லெயோபோல்தோ ஜிரெல்லி** பனிமய அன்னையின் பேராலயம் வருகை தந்தார். பேராலயப் பங்கு எல்லையில் அன்னாருக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டு, திறந்த ஜீப்பில் பவனியாக அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து, பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

திருப்பலியின் நிறைவில் பனிமய அன்னையின் திருச்சுருபத்திற்கு வணக்கம் செலுத்தி, ஆசி வழங்கினார்கள். தங்கத் தேர்ப் பிறைக்கும் வருகை தந்து, புதிதாகச் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டுக்கொண்டிருந்த தேரைப் பார்வையிட்டு, பின்னர் புனித நீரால் தெளித்து ஆசி வழங்கினார்கள்.

அதை முன்னிட்டு பனிமய அன்னையின் திருச்சுரூபம் பத்ராசனத்திலிருந்து இறக்கப்பட்டு, பீடத்தில் இறைமக்களின் நெருங்கிய பார்வைக்காக ஜூன் 10, 11 இரண்டு நாள்கள் வைக்கப்பட்டிருந்தது.

**4. அன்னைக்குப் புதிய ஆபரணங்கள்.** “*ஓபீரின் பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி*” (திபா 45:9).

கடந்த 5 ஆண்டுகளில் 60 பேர் பனிமய அன்னைக்கு நன்றிக் காணிக்கையாக தங்க நாணயங்கள் அல்லது நகைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகளைக் கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று முறை (2022, 2023, 2024) மொத்தமாக 248 பவுனில் அன்னைக்கு ஆபரணங்கள் செய்து

அணிவிக்கப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டு 200 பவுனிலும், 2023 தங்கத் தேர்ப் பவனியின்போது 28 பவுனிலும், 2024ல் 20 பவுனில் ஒரு தங்க செபமாலையும் செய்யப்பட்டுள்ளன.

**5. கூட்டுத் திருமணங்கள்.** "***மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்***" (மத் 25:40).

மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பனிமயத் தாய்க்கு சீர்மிகு வாழ்த்தாக 14 மண இணையர்களுக்கு 08.05.2022 அன்று ரூ. 45 இலட்சம் செலவிலும், தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டுப் பனிமயத் தாய்க்கு சீர்மிகு வாழ்த்தாக 25 மண இணையர்களுக்கு 20.08.2023 அன்று ஒரு கோடி ரூபாய் செலவிலும் இலவசத் திருமணம் நடத்தப்பட்டது.

**6. அறச் செயல்கள்.** "***அவர்கள் வாரி வழங்கினர்; ஏழைகளுக்கு ஈந்தனர்; அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்; அவர்களது வலிமை மாட்சியுடன் மேலோங்கும்***" (திபா 112:9).

- ஆறு வீடுகள் 25 இலட்சத்தில்
- வெள்ளிதோறும் திருச்சிலுவை அன்பு உணவு திருச்சிலுவை சிற்றாலயத்தில் சராசரியாக 120 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 9 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- கொரோனா கால, பெருவெள்ள கால உதவிகள்
- கல்வி, மருத்துவம், திருமணம், வாழ்வாதாரம், அடக்கச் செலவுகள்
- கோவில்கள் கட்ட நன்கொடை ரூ 7 இலட்சம்

❖ ரொசேரியன் மௌன மடம், கார்மேல் மௌன மடக் கன்னியர் இல்லங்கள், ஏழை மாணவர் விடுதிகள், தொழுநோயாளர் மருத்துவமனை எனக் கடந்த 5 ஆண்டுகளில் ஒரு கோடியே, ஐம்பது இலட்ச ரூபாய் பேராலயத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**7. பனிமய நோன்பு வழிபாடுகள்.** "***இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பெத்தேலுக்கு வந்து ஆண்டவர் திருமுன் அமர்ந்து அன்று மாலைவரை உண்ணாநோன்பு இருந்தனர். மேலும் அவர்கள் எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் ஒப்புக்கொடுத்தனர்***" (நீத 20:26).

கடந்த 44 மாதங்கள் மாதந்தோறும் ஒரு கருத்துக்காக 3 மணி நேர நோன்பு வழிபாடு. குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக, திருமண வரனுக்காக, வேலை வாய்ப்புக்காக, நெடுநாள் நோயாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்காக, தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்காக... எத்தனையோ புதுமைகள். 105 சாட்சியங்கள் பனிமயம் இதழில் அச்சிடப்பட்டுள்ளன.

**8. விவிலியப் பாசறைகள்.** "***புதிதாய்ப் பிறந்த குழந்தைகள்போல, வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள்***" (1 பேது 2:2).

கடந்த 5 ஆண்டுகளில் 105 விவிலியப் பாசறைகள் நடத்தப்பட்டு, சராசரியாக 50 பேர் பங்கேற்றனர். இவ்வாறு, இறைவார்த்தை ஆர்வம் வளர்ந்துள்ளது. பனிமயம் இதழின் விவிலியப் போட்டியில் தொடர்ந்து வெற்றி பெற்ற 85 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**9. இறைப்புகழ்ச்சியும், இறைவேண்டல்களும். "*அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியைச் செலுத்துவோமாக, அவருடைய பெயரை அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும்*"** (எபி 13:15).

ஐந்து ஆண்டுகளாக அனைத்துத் திருப்பலிகளிலும் நற்கருணைத் திருவிருந்திற்குப் பிறகு இறைபுகழ்ச்சி. பெருவிழா நாள்களில். இறையடியார்களுக்காக 1000 நாள் தொடர் மன்றாட்டு. இறைவேண்டல் ஏடுகள். இறைமொழி மன்றாட்டு ஏடு. பனிமய அன்னைக்கு 2 புதிய மன்றாட்டுகள்.

**10. தவக்காலத் திருநிகழ்வுகள். "*தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்' எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்*"** (2 கொரி 6:2).

வியாழன் தியான உரைகள், ஏழு தலையான பாவங்கள், ஒப்புரவு அருள்சாதனம், மங்கலகிரியில் ஒருநாள் தியானம், சாம்பல் புதனன்று 12.00 முதல் 03.00 வரை நோன்பு வழிபாடு, குருத்து ஞாயிறு அன்று 11.00 முதல் 03.00 வரை "சிலுவையிலிருந்து 7 வார்த்தைகள்" நோன்புத் தியானம் ஆகிய தனித்துவ நிகழ்வுகள் பனிமய அன்னைப் பேராலயப் பங்கிற்கு மட்டுமே உரிய பெருமித நிகழ்வுகள்

இவை அனைத்திற்காகவும் ஆண்டவருக்கு நன்றி. பனிமய அன்னையே வாழ்க!



# 5

# தங்கத் தேர்ப் பெருவிழா - 2023ன் தனிச் சிறப்புகள்

1. தங்கத் தேர்ப் பெருவிழா 300 நாள் அன்னையின் திருச்சுரூப இல்லம் சந்திப்பு.
2. 100 நாள் சிறப்பு பரிந்துரை மன்றாட்டு
3. 30 நாள் நோன்பு ஆராதனை வழிபாடு
4. 9 நாள் தூய ஆவியாருக்கு நவநாள் மன்றாட்டு
5. முழு இரவு செபமாலையுடன் தொடங்கி, முழு இரவு செபமாலையுடன் நிறைவு
6. எண்பது விழுக்காடு தேர் புதிதாகச் செய்யப்பட்டது.
7. பாப்பிறையின் இந்தியத் தூதர் பேராலய வருகை, தேரை ஆசீர்வதித்தது.
8. அன்னையின் திருச்சுரூபம் 2 நாள்கள் மக்களின் பார்வைக்காக கீழே வைக்கப்பட்டது.
9. தங்கத் தேர்ப் பெருவிழா அழைப்பிதழ் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டது.

10. தங்கத் தேர் ஜோடனைக்காக ஜப்பானிலிருந்து தங்கத் தாள் வந்தது.

11. தேர்க் கற்கள் பவனியின்போது அன்னையின் பாதத்தில் வைக்கப்பட்டது.

12. அனைத்து நன்கொடையாளர்களுக்கும் தேர்க் கற்கள் வழங்கப்பட்டன.

13. 37 நாள்கள் மக்களின் பார்வைக்கு தங்கத் தேர் வைக்கப்பட்டது.

14. தங்கத் தேரின் முன் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன.

15. பெருவிழாவின் ஒவ்வொரு நாளும் ஓர் ஆயர் சிறப்பித்தது.

16. நிறைவு நாளில் கோவா கர்தினால் பிலிப் நேரி அவர்களின் வருகை

17. இலங்கை மன்னார் ஆயர் இம்மானுவேல் அவர்களி;ன் சிறப்பு வருகை

18. தேர்ப் பெருவிழா அன்று மாலையிலேயே மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் தலைமையில் "நன்றி விழா" நடத்தப்பட்டு, தங்கத் தேர்ப் பெருவிழாவுக்கு உதவி செய்த 18 பேர் கௌரவிக்கப்பட்டது.

19. ரூ. 92 இலட்சம் செலவில் புதிய தங்கத் தேர்ப் பறை கட்டப்பட்டு "தேர் மாறன்" பெயர் சூட்டப்பட்டது.

20. தங்கத் தேர்ப் பெருவிழாத் திருப்பலியும், தேர்ப் பவனியும் முதன் முதலாக மாதா தொலைக்காட்சியில் நேரலை ஒளிபரப்பு.

21. இதுவரை இல்லாத அளவுக்கு தங்கத் தேர்த் திருப்பணிகளுக்காக ரூ. 3 கோடி, 31 இலட்சம் நன்கொடை மற்றும் காணிக்கையாகப் பெறப்பட்டது.

22. தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டுப் பனிமயத் தாய்க்கு சீர்மிகு வாழ்த்தாக 25 மண இணையர்களுக்கு இலவசத் திருமணம் நடத்தப்பட்டது.

23. இறைமக்கள் காணிக்கையாகத் தந்த தங்கப் பொருள்களிலிருந்து தங்கத் தேர்ப் பவனிக்காக என்றே 28 பவுனில் பனிமய அன்னைக்கு ஒரு தங்க மாலை, ஒரு நெக்லஸ், ஒரு ஜோடி கம்மல்கள் செய்யப்பட்டன.

24. தங்கத் தேர் மலர் 1000 பிரதிகள் எந்தவித விளம்பரங்களும் இன்றி, பனிமய அன்னையைப் பெருமைப்படுத்தும் 90 படைப்புகளோடு வெளியிடப் பட்டது.

25. பெருவிழா நாள்களில் ஸ்நோஸ் பசிலிக்கா இணையதளம் வாயிலாகப் பெருவிழா நிகழ்வுகளில் 27 நாடுகளைச் சேர்ந்த 4,50,000 பேர் பங்கேற்றனர். பெருவிழாவுக்கு முன் பேராலய இணையதளத் தொடர்பாளர்களாக (subscribers) 13 ஆயிரம் பேர் இருந்தனர். பெருவிழாவுக்குப் பின்னர் இந்த எண்ணிக்கை 19,563 ஆக உயர்ந்துள்ளது,



# 6

# பேராலயப் பங்கின் சில தனித்துவ நிகழ்வுகள்

**1. 1000 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு.** நமது பங்கின் பெருமிதங்களான இறையடியார் அந்தோனி சூசைநாதர், இறையடியார் அகுஸ்தின் பெரைரா இருவரும் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமென்றும், இவர்களின் பரிந்துரையால் நமது பங்கின் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றும் 1000 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு கடந்த 2019 நவம்பரில் தொடங்கி, 1000 நாள்கள் நடைபெற்று 13.08.2022 அன்று நிறைவுபெற்றது. ஒவ்வொரு நாளும் ஓர் இல்லத்திற்கு இறையடியார்களின் திருவுருவப் படம் எடுத்துச் செல்லப்பட்டு, இறைவேண்டல் செய்யப்பட்டது.

**2. இலவசத் திருப்பலிக் கருத்துகள்** - புனித சகாய மாதா பீடத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இறைமக்கள் தங்கள் திருப்பலிக் கருத்துகளைப் போடலாம். அவை ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலைத் திருப்பலியில் வாசிக்கப்பட்டு, அந்தக் கருத்துகளுக்காக கட்டணமின்றித் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. கடந்த 5 ஆண்டுகளில் 143 வாரங்களில் 2424 திருப்பலிக் கருத்துகள் நிறைவேற்றப்பட்டதாக பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**3. வெள்ளி அன்பு உணவு.** பேராலயத்தின் திருச்சிலுவை சிற்றாலயத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற இந்நிகழ்வு பங்குத் தந்தையின் நேரடி மேலாண்மையில் நடைபெறுகிறது. நண்பகல் 12.00 முதல் 12.30 வரை இறைவேண்டலும், தொடர்ந்து அன்பு உணவும் பரிமாறப்படுகிறது. வருகிறவர்கள் அனைவருக்கும் உணவு பகிரப்பட தொண்டர் குழு உருவாக்கப்பட்டுள்ளது. தாராள உள்ளம் கொண்ட நன்கொடையாளர்களின் பங்கேற்புடன், பேராலய நிதியும் பயன்படுத்தப்படுகிறது.

**4. செவ்வாய்ப் தோறும் குணமளிக்கும் நற்செய்தி வழிபாடு.** சகோ. ரிச்சர்ட் அவர்களின் தலைமையில் திருச்சிலுவை செபக்குழுவின் பெயரால் நடைபெற்ற செவ்வாய் நற்செய்திக் கூட்டங்கள் தற்பொழுது பங்குத் தந்தையின் மேலாண்மையில் நடைபெறுகின்றன. அருள்பணியாளர்கள் அழைக்கப்பட்டு, பிற்பகல் 01.00 முதல் மாலை 04.00 வரை இறைபுகழ்ச்சி, இறைச் செய்தி, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி ஆகியன நடைபெற்றன. சராசரியாக 100 பேர் கலந்துகொண்டனர்.

**5. இளம்பெண்களுக்காக லூர்து மாதா இளம் பெண்கள் சபை** உருவாக்கப்பட்டு, சனிக்கிழமைதோறும் இரண்டாம் திருப்பலியில் நாடா அணிந்து, திருப்பலி முடிந்ததும் குழுவாக இறைவேண்டல் செய்கின்றனர். 35 பேர் உறுப்பினர்கள். சராசரியாக 15 பேர் பங்கேற்கின்றனர். எல்லா இளம்பெண்களையும் பங்கேற்கச் செய்ய பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும்.

**6. திருமணமான பெண்களுக்காக திருக்குடும்ப சபை** தொடங்கப்பட்டு, புதன்கிழமைதோறும் முதல் திருப்பலியில் நாடா அணிந்து, திருப்பலி முடிந்ததும் குழுவாக

இறைவேண்டல் செய்கின்றனர். 35 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். சராசரியாக 25 பேர் கலந்துகொள்கின்றனர்.

**7. பனிமயம் இதழில் பனிமயப் பகிர்வு செய்தி மடல்.** கடந்த 5 ஆண்டுகளாக பனிமயம் இதழின் கடைசி சில பக்கங்கள் "பனிமயப் பகிர்வு" என்னும் தலைப்பில், பேராலயப் பங்கு மக்களுக்கான செய்தி மடலாக ஒதுக்கப்பட்டன. இப்பக்கங்களில் "பனிமயச் சுவடுகள்" பகுதியில் பங்கில் நடைபெற்ற 550 முக்கிய நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்பட்டன. பங்கில் அடுத்த மாதத்தில் நிகழவிருப்பவை அச்சிடப்பட்டன. திருமுழுக்கு பெற்றவர்கள், திருவிருந்து பெற்றவர்கள், திருமண அருள்சாதனம் பெற்றவர்கள், நோயில் பூசுதல் பெற்றவர்கள், இறைவனில் இளைப்பாறியவர்கள் ஆகியோரின் விபரங்கள் அச்சிடப்பட்டன.

**8. தஸ்நேவிஸ் மாதா அன்பு நிதி.** பேராலய பங்கு மக்கள், தூத்துக்குடி நகரின் இதர பங்கு மக்கள், இந்து-இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் என்னும் மூன்று பிரிவினருக்கு கல்வி, திருமணம், மருத்துவம், வாழ்வாதாரம் என்னும் நான்கு பிரிவுகளில் குடும்பத்திற்கு தலா ரூ. 5000 வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டில் பேராலய பங்கின் 37 குடும்பங்கள், பிற பங்குகளின் 34 குடும்பங்கள், இந்து-இஸ்லாமியர் 13 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**9. கல்வி ஊக்க நிதி.** பெங்களூர் புனித மரியன்னை கல்வி மற்றும் சமூகப் பணி அறக்கட்டளையின் சார்பாக அருள்தந்தை **அந்தோணி இராயன்** அவர்கள் வழங்கிய ரூ. 20,000 நமது பங்கின் 20 மாணவர்களுக்கும், தூத்துக்குடி துறைமுகம் சகாயமாதா பங்கைச் சேர்ந்த திரு. **ஜஸ்டின்** அவர்கள் வழங்கிய ரூ. 10,000 கல்வி நிதி 10 மாணவர்களுக்கும்

வழங்கப்பட்டது. இம்மாணவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, கல்விப் பாசறையில் பங்கேற்றனர். கிறிஸ்துமஸ் விழாவிலும் பங்கு பெற்றனர்.

**10. மணமக்களுக்கான சிறப்பு மன்றாட்டு.** திருமணத் திருப்பலிகளின்போது நற்கருணைத் திருவிருந்திற்குப் பின் இறைபுகழ்ச்சியும், தொடர்ந்து பனிமயத் தாயிடம் மணமக்களுக்காகப் பரிந்து மன்றாடும் சிறப்பு மன்றாட்டும் அறிமுகப்படுத்தப்பட்டன.

**11. திருமணத் திருப்பலிக்கான கட்டுப்பாடுகள்.** பேராலய வளாகத்தில், ஆலய முன் சாலையில், கொடி மர வளாகத்தில் வெடி வெடிப்பது மிகக் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். செண்டை மேளம், தான்டியா மேளம், குஜராத்தி மேளம் பயன்படுத்த அனுமதி இல்லை. மணமகன் மற்றும் மணமகள் இரு வீட்டார் சார்பாக புகைப்படக்காரர் ஒருவர், வீடியோக்காரர் ஒருவர் என மொத்தம் இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்னும் மூன்று கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு 90% வெற்றி பெறப்பட்டது. மேலும், பேராலய முற்றத்திற்குள் செருப்பு, ஷூ அணியாமல் வரவேண்டும் (மணமக்களுக்கு அனுமதி உண்டு). திருமண நேரத்தில் கை தட்டுவதோ, பூக்கள் போடுவதோ கூடாது என்னும் பேராலய மரபுகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

**12. திருமணப் பதிவு.** திருமணம் முடிந்தபின்னர், மறவாமல் பேராலய அலுவலகத்தில் திருமணச் சான்றிதழைப் (2 பிரதிகள்) பெற்று, அரசின் பதிவு அலுவலகத்தில் திருமணத்தைப் பதிவு செய்துகொள்ளுங்கள். அதற்கு உதவி செய்யும் முகவர்கள் திரு. கென்னடி - 98433 34450, திரு. அமல்ராஜ் - 9789789114, திரு. பிரான்சிஸ் - 9443584134.

**13. திருத்தந்தையின் கருத்துகளுக்காக மன்றாட்டு.** ஒவ்வொரு மாதத்தின் திருத்தந்தையின் கருத்து முதல் திருப்பலிக்கு முன்னதாக திரையில் காட்டப்படுகிறது. மாதம் இருமுறை ஞாயிறு திருப்பலியில் அக்கருத்துக்காக மன்றாடப்படுகிறது.

**14. யூட்யூப் காணொளிகள்.** ஸ்நோஸ் பசிலிக்கா இணைய தளத்தோடு ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் அலைவரிசையும் உள்ளது. நேரலையாகக் காட்டப்படும் அனைத்துப் பேராலய நிகழ்வுகளும் இதில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. தவிர, அருள்பணி. குமார்ராஜாவின் "அன்புடன் அருள்வேந்தன்" யூட்யூப் சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள 1000 காணொளிகளும் பங்கின் அனைத்து அன்பியங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

**15. இன்றைய இறைமொழி.** பனிமய அன்னைத் திருத்தலத்திலிருந்து ஒவ்வொரு நாளும் "இன்றைய இறைமொழி" என்னும் தலைப்பில் வாட்ஸ் அப் வழியாக ஐந்து ஆண்டுகளும் அனுப்பப்பட்டது.

**16. முதல் சனி சப்பரப் பவனி நேரலை ஒளிபரப்பு.**

**17. பீடப் பூக்களுக்கான மன்றாட்டு.** பீடப்பூக்களும், திருப்பீடத்தில் பணியாற்றும் பிறரும் வழிபாட்டுக்கு முன்பும், வழிபாடு முடிந்தபிறகும் செபிப்பதற்கான மன்றாட்டு பேராலயத் திருவறையில் ஒட்டப்பட்டுள்ளது. அனைத்துத் திருப்பலிகளிலும் அவர்கள் இதனை செபிக்க ஊக்குவிக்கப் பட்டனர்.

**18. திருப்பலி வாசகர்களுக்கான வாய்ப்பு.** திருப்பலி களில் வாசகம், இறைபுகழ்ச்சி வாசிப்பதற்குப் பலரும் ஊக்குவிக்கப்பட்டு தற்பொழுது 300 பேருக்கு மேல் உள்ள

பட்டியலிலிருந்து வரிசைப்படி வாய்ப்புகள் வழங்கப் படுகின்றன. மாதமொரு வாரம் பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**19. முதியோர் நற்கருணை வழங்கல் திட்டமிடல், ஆசை மன்றாட்டு.** தலைவெள்ளிதோறும் நற்கருணை பெறுகிற முதியோர், நோயாளர் பற்றிய தகவல்கள், உடன் திருப்பணி செய்யும் தன்னார்வத் தொண்டர்கள் பற்றிய அறிவிப்பு முன் கூட்டியே வாட்ஸ் அப் வழியாக அனுப்பப் படுகிறது. தலைவெள்ளி நற்கருணை வழங்குவதற்கான செப அட்டைகள் தயாரிக்கப்பட்டு, அனைத்துக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. நற்கருணை பெறுவோர் செபிக்க வேண்டிய "ஆசை மன்றாட்டு" இப்பங்கில் மட்டுமே உள்ளது.

**20. திருமண அறிக்கை, மரண அறிக்கை** ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்களின் புகைப்படமும் இணைக்கப்பட்டு வாட்ஸ் அப் வழியாக அனுப்பப்பட்டது, வரவேற்பும் பெற்றது.

**21. திருமுழுக்கு, திருவிருந்து, திருமணம்** மூன்றுக்கும் குடும்பத்தினர் செய்யவேண்டியவை பற்றிய தெளிவான தகவல்கள் எழுத்து வடிவில் வழங்கப்படுவது நமது பங்கில் மட்டுமே.

**22. ஞாயிறு அறிவிப்புகள்** அனைத்தும் சனிக்கிழமை மாலையே வாட்ஸ் அப் வழியாக அனைவருக்கும் அனுப்பப்படுவது வேறு எந்தப் பங்கிலும் நடவாத ஒன்று.

**23. தவக்காலத் திருப்பயணிகளுக்கான விபரங்கள்** வாட்ஸ் அப்பில் அனுப்பப்பட்டது.

**24. அருள்சாதனம் பெறுவோர்** விவிலியப் பாசறையில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டது.

**25. இறைவேண்டலை ஊக்குவிக்க 3 செபக் கையேடுகள்** அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. ★

7

# பனிமயத் தாயைப் பெருமைப்படுத்திய முன்னெடுப்புகள்

பேராலயப் பங்கை வழிநடத்திய முன்னாள் பங்குத் தந்தையர் அனைவருமே தமக்கேயுரிய வழிகளில் பனிமயத் தாய்க்குப் பெருமை சேர்த்திருக்கின்றனர். அந்த மரபைப் பின்பற்றி, கடந்த ஐந்து ஆண்டுகளில் நம் தாயைப் பெருமைப்படுத்தும் விதத்தில் எடுக்கப்பட்ட புதிய முன்னெடுப்புகள்:

1. கல்வி, மருத்துவம், திருமணம், வாழ்வாதாரப் பயன்பாடுகளுக்காக வழங்கப்படும் உதவி பனிமயத் தாயின் பெயரால் **“தஸ்நேவிஸ் மாதா அன்பு நிதி”** என்று அழைக்கப்பட்டது.

2. பங்கு மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க **“தஸ்நேவிஸ் மாதா வாசகசாலை”** திறக்கப்பட்டது.

3. பத்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டம் **“தஸ்நேவிஸ் மாதா செல்வமகள் திட்டம்”** என்று பெயர் சூட்டப்பட்டது.

4. பங்கில் நடத்தப்பட்ட திறன் வளர்ப்புப் பயிற்சிகள் **“பனிமயம் திறன் வளர்ப்புப் பயிற்சிகள்”** என்று அழைக்கப்பட்டன.

5. மரியன்னைப் புனிதர்களான புனித லூயி மரிய மான்ட்ஃபோர்ட், அருளாளர் பார்றோலோ லோங்கோ, புனித அந்தோனியார், புனித அல்போன்ஸ் மரிய லிகோரியார் ஆகியோரின் **புகழ்பெற்ற மரியன்னை மன்றாட்டுகள்** ஒவ்வொரு நாள் திருப்பலியிலும் செபிக்குமாறு அறிமுகப்படுத்தப்பட்டன.

6. பங்கு மக்களுக்கு அறிமுகமில்லாத **புகழ்பெற்ற மரியன்னைத் திருத்தலங்களை** அறிமுகப்படுத்திய பாசறை மரியாயின் சேனையினர், பொம்பெயி மாதா சபையினர், அமலோற்பவ மாதா வாலிபர் சபையினருக்கு நடத்தப்பட்டது.

7. பனிமயம் இதழில் நமது பசிலிக்கா **பேராலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்** நம் பங்கின் மைந்தன், வரலாற்று ஆய்வாளர், திரு. செல்வராஜ் மிராந்தா அவர்களால் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டது.

8. **மரியன்னையின் மேன்மைகள்** என்னும் மரியன்னை புகழ்பாடும் கட்டுரைகள் ஒவ்வொரு மாதமும் பனிமயம் இதழில் அச்சிடப்பட்டன.

9. நமது பசிலிக்கா திருத்தலம் வந்து பனிமயத் தாயிடம் பெற்றுக்கொண்ட புதுமைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் **100 பனிமய சாட்சியங்களாக** பனிமயம் இதழில் பனிமயத் தாய்க்குப் பெருமையாக வெளியிடப்பட்டன.

10. கடந்த ஐந்து ஆண்டுகளும் மாதாவின் பெருவிழா சிறப்பாக நடைபெறவேண்டுமென்னும் நோக்கத்தோடு அன்பியங்களில் **30 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு** நல்ல பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

11. பெருவிழா ஆயத்தமாக ஒன்பது நாள் **"எரிக்கோ பேரணி"** என்னும் சிறப்பு மன்றாட்டுப் பவனி பேராலயத்தில் நடத்தப்பட்டது.

12. ஊரடங்கு நாள்களில் 100 நாள்கள் தொடர்ந்து பேராலயம் அடைக்கப்பட்டிருந்தபோதும், காலையில் திருப்பலியும், மாலையில் அரைமணி நேரம் **நற்கருணை ஆராதனையும், மரியன்னைக்குப் புகழ் மாலை**யும் தொய்வின்றி நடைபெற்றன.

13. ஊரடங்கு நாள்களில் பனிமயத் தாயின் திருமுகத்தைப் பார்க்க இயலாத மக்களுக்காக முதற் சனி வழிபாட்டில் பனிமயத் தாய்க்குத் தீப, தூய, மலரஞ்சலியுடன் திருப்புகழ் சாற்றப்பட்டு, **தொலைக்காட்சியில்** ஒளிபரப்பப்பட்டது.

14. பனிமயத் தாயின் உருவம் பொறித்த **"இன்றைய இறைமொழி"** நமது பேராலயத்திலிருந்து ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும், வாட்ஸ் அப் மூலம் உலகம் முழுவதும் சென்றது.

15. திருத்தப்பட்ட **"பேராலய வரலாறு"** நூல் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு திருத்தலப் பயணிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. பேராலய விற்பனையத்திலும் வைக்கப் பட்டுள்ளது.

16. மரியன்னையின் புகழ் பரப்பும் ஐந்து மரியியல் நூல்கள் வெளியிடப்பட்டன.

17. அருள்பணி. குமார்ராஜா எழுதி, இசையமைத்த பனிமய அன்னைப் பாடல்கள் (2), நன்றிப் பாடல்கள் (2) அர்ப்பணிக்கப்பட்டன.

# 8

# திறனாய்வும், பரிந்துரைகளும்

கடந்த ஐந்தாண்டுப் பணிகளையும் திறனாய்வு செய்வது அவசியம். எனது பார்வையில் நான் செய்த திறனாய்வு இதோ:

1. பங்கு மக்களின் பங்கேற்பை மூன்று விதங்களாகப் பிரிக்கலாம்: சிறந்த பங்கேற்பு, ஓரளவு பங்கேற்பு, குறைந்த பங்கேற்பு.

    **சிறந்த பங்கேற்பு** : பனிமய அன்னை பெருவிழாவுக்கு ஆயத்தமாக நடைபெற்ற 30 நாள் பரிந்துரை, 9 நாள் எரிக்கோ பேரணி, 100 நாள் தொடர் மன்றாட்டு, பனிமய நோன்பு வழிபாடு போன்ற பேராலய வழிபாட்டு நிகழ்வுகளில் திரளான இறைமக்கள் கலந்துகொண்டனர்.

    **ஓரளவு பங்கேற்பு** : விவிலியப் பாசறைகள், தொடக்க ஆண்டில் வழங்கப்பட்ட இசைக் கருவிப் பயிற்சி, ஓவியப் பயிற்சி போன்றவற்றில் ஓரளவு பங்கேற்பு இருந்தது.

    **குறைந்த பங்கேற்பு** : ஆங்கிலப் பேச்சுத் திறன், இளையோருக்கான கூட்டங்கள், வாசக சாலை, மறைமாவட்ட நிகழ்வுகள் போன்றவற்றில் மிகவும் குறைந்த பங்கேற்பே இருந்தது,

ஆர்வமின்மை, ஊக்கமின்மை, புதிய நிகழ்வுகள் என்பதால் போதிய அறிமுகமின்மை போன்றவை காரணமாக இருக்கலாம். இதே நிகழ்வுகளைத் தொடர்ந்து ஊக்கத்துடன் செயல்படுத்தினால் பங்கேற்பு அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

அன்பியப் பங்கேற்பு, பேராலயத் தூய்மைப் பணியில் பங்கேற்பு, பனிமயம் இதழ் வாசிப்பு, பனிமய விவிலியப் போட்டியில் பங்கேற்பு போன்றவற்றில் 28 அன்பியங்களும் இந்த மூன்று வகைகளுக்குள்ளும் வந்தன. அன்பியப் பொறுப்பாளர்களின் ஊக்கம், ஆர்வம், அன்பியக் குடும்பங்களுடன் நல்லுறவு, பேராலயத்தின் அருகாமை அல்லது தொலைவு போன்றவை காரணமாக இருக்கலாம். அன்பிய வழிகாட்டிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆர்வமற்ற வழிகாட்டிகள் மாற்றப்பட்டு, ஆர்வமுள்ளவர்கள் பொறுப்பேற்கும் முறையைக் கொண்டுவர வேண்டும்.

2. பங்கில் இருந்தும், இல்லாமல் இருக்கின்ற குடும்பங்கள், குடும்ப அட்டை இல்லாமல் பங்கு உறுப்பினர் என்று சொல்லிக்கொள்ளும் குடும்பங்கள் 25க்கும் மேல் இருக்கின்றன. அவை முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. நலிந்த குடும்பங்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள், குறிப்பாகக் கைம்பெண்களின் பட்டியல் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஆண்டிற்கு சில தடவைகள் (பெருவிழா, கிறிஸ்துமஸ், தவக்காலம்) பேராலயத்தின் சார்பாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

4. இதர நலிந்த குடும்பங்கள் பற்றிய வாழ்க்கைத் தர ஆய்வு செய்யப்பட்டு, வேலை வாய்ப்பு, சேமிப்பு, குடிநோய் விடுதலை, பிள்ளைகளின் கல்விக்கான நிதியுதவி போன்ற திட்டங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

5. நமது பேராலய பங்கின் நிர்வாகத்திலுள்ள தஸ்நேவிஸ் மாதா தொடக்கப் பள்ளி, பங்கின் எல்லைக்குள் அமைந்துள்ள தஸ்நேவிஸ்மாதா மேல்நிலைப்பள்ளி, புனித தெலசால் மேல்நிலைப்பள்ளியில் நமது பங்கு மாணவ மாணவியரைச் சேர்க்க ஊக்குவிக்க வேண்டும்.

6. பங்கில் குடி, போதைக்கு அடிமையாகியுள்ளோரை இனம் கண்டு, விடுதலை உதவிகள் செய்யப்பட வேண்டும்.

## பெற்றோர் செய்ய வேண்டியவை

ஐந்தாண்டு அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று பெற்றோர் தம் பிள்ளைகளை மறையறிவிலும், செப வாழ்விலும் இன்னும் ஈடுபாட்டோடு வளர்க்க வேண்டும் என்பது. இளையோர் பலருக்கும் செபங்கள் தெரியவில்லை, செப உணர்வும் இல்லை. எனவே, பின்வருவன பெற்றோருக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.

1. தூய ஆவியார் மன்றாட்டு, மிகவும் இரக்கமுள்ள தாயே... போன்ற மரபு மன்றாட்டுகளைப் பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்றுத் தரவேண்டும். நாள்தோறும் வீட்டில் அவற்றை செபிப்பதன் வழியாக மனப்பாடமாக வேண்டும்

2. திருப்பாடல்கள் 23, 121, 150, 91 ஆகியவற்றை பிள்ளைகள் மனப்பாடம் செய்து நாள்தோறும் செபிக்க ஊக்குவியுங்கள்.

3. பலருக்கும் தமிழ் செபங்களை, இறைவார்த்தையை வாசிப்பதில் சிக்கல் இருக்கிறது. வீட்டில் உரத்த குரலில் செபங்களை, விவிலியத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

4. பலருக்கும் கண்களை மூடி, கரங்களைக் குவித்து, பக்தியாக செபிக்க வருவதில்லை. அந்த அனுபவமில்லை. வீட்டில் அந்த அனுபவங்களைக் கொடுங்கள்.

5. பத்து நிமிடங்கள் முழங்கால்படியிட்டு செபிக்க இயல்வதில்லை. வீடுகளில் முழங்காலில் இருந்து செபிப்பதை ஊக்குவியுங்கள்.

6. சற்று உரத்த குரலில் வாசிக்கவும், செபிக்கவும், பாடவும் பயிற்சி கொடுங்கள்.

7. சொந்தமாக செபிக்கவும் கற்றுக்கொடுங்கள்.

## இன்னும் சில பரிந்துரைகள்

1. பங்கில் நடைமுறையிலுள்ள திருவழிபாட்டு ஒழுங்குகள் எந்த விதிவிலக்குமில்லாமல் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

2. பேராலயப் பங்கின் நேர மேலாண்மை மிகவும் புகழ்பெற்றது. அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

3. செவ்வாய்க்கிழமை திருச்சிலுவை சிற்றாலயத்தில் நடைபெறும் நலம் தரும் நற்செய்தி வழிபாடு தொடர்ந்து ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

4. விவிலியப் பாசறைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு, பங்கேற்போரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அன்பிய வழிகாட்டிகள், பக்த சபையின் உறுப்பினர்கள் போன்றோர் ஆண்டுக்கு குறைந்தது சில பாசறைகளிலாவது பங்கேற்க கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

5. திருப்பலியில் வாசகம், இறைபுகழ்ச்சி வாசிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, குடும்பத்துக்கு ஒருவராவது வாசிக்க முன் வரவேண்டும்.



9

# 30 நாள் நன்றி மன்றாட்டு

***(21.04.2024 முதல் 20.05.2024 வரை 30 நாள் பேராலயத்தில் செபிக்கப்பட்டது)***

அன்பின் தந்தையே இறைவா, உமக்குப் புகழ். இயேசுவே ஆண்டவரே, உமக்குப் புகழ். தூய ஆவியாரே, துணையாளரே உமக்குப் புகழ். உமது சொல்லொண்ணாக் கொடைக்காக உமக்கே நன்றி உரித்தாகுக. பனிமயத் தாயின் வல்லமைமிக்க பரிந்துரையால் நீர் செய்த வியத்தகு செயல்களுக்காக நன்றி. நாள்தோறும் பனிமயத் தாயின் திருமுக தரிசனம் கிடைத்ததற்காக நன்றி. இப்பேராலயத்தில் உமது புகழ்ச்சியும், வார்த்தையும் பறைசாற்றப்பட்டதற்காக நன்றி. தடைகள் அனைத்தையும் உடைத்ததற்காக நன்றி. எங்கள் வேண்டுதலுக்கும், தகுதிக்கும் மேலாகவே அருள் பொழிந்ததற்காக நன்றி. எல்லா மாட்சிமையும் எங்கள் புகழ் அனைத்தும் உமக்கு மட்டுமே உரித்தாகுக, ஆமென்.



# 10

# அருள்பணி. குமார்ராஜா இயற்றி, இசையமைத்த பனிமய அன்னைப் பாடல்கள்

**பனிமயத் தாய் மரியே**

பாசத்தின் மாதாவே
பாவிகள் எமக்காகப்
பரிந்து மன்றாடுமம்மா

1. பாதை தெரியாமலே
பாலைநிலம் அலைந்தோம் - 2
வழிகாட்டும் வளர்நிலவே
நல்வழி காட்டுமம்மா - 2

2. விடியாதா எம் வாழ்வென்று
விளக்கொன்றை ஏற்றி வைத்தோம் - 2
விடியலின் விண்மீனே
விரைந்தெம்மைப் பாருமம்மா - 2

❖ ❖ ❖

**பனிமயத் தாயே இனியவளே**

உம் புகழினைப் பாடினோம் ஏற்பாயே

1. இறைவனின் திருவுளம் பணிந்து நின்றாய்
இயேசுவின் தாயாய் உயர்த்தப்பட்டாய் - 2
எம்மவர் வாழ்வுக்கும் வழிகாட்டு - 2 எம்மில்
**மன்னவன் இயேசுவின் ஒளியேற்று - 2**

2. உரிமையற்றோருக்குக் குரல் கொடுத்தாய்
ஒடுக்கப்பட்டோருக்கு உதவி நின்றாய் - 2
விடுதலை வாழ்வெனும் மகிழ்வின் இரசம் - 2 இங்கு
**ஏழையர் வாழ்வினில் நிரம்பச் செய்யும் - 2**

❖ ❖ ❖